

# பனிமயம்

அக்டோபர் 2021

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-





# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



உங்கள் அனைவருக்கும் பனிமயத் தாயின் இனிய பெயரில் வாழ்த்துகள்!

“அவரைச் சார்ந்துதான் நாம் வாழ்கின்றோம், இயங்குகின்றோம், இருக்கின்றோம்” (திப 17:28) என்னும் இறைவார்த்தையை இந்நாள்களில் நாம் உய்த்துணர்ந்து வருகிறோம். கடவுளின் பேரிரக்கத்தால் பெருந்தொற்றின் ஆபத்திலிருந்தும், இதர தீமைகளில் இருந்தும் பாதுகாக்கப்பட்டவர்களாய் நாம் வாழ்கிறோம். அதற்காக ஆண்டவருக்கு நன்றி சொல்வோம். கடந்த மாதம் முழுவதும் வெள்ளி, சனி, ஞாயிறு தவிர இதர நாள்களில் பேராலய வழிபாடுகள் தடையின்றி நடைபெற்றன. அன்னை மரியாவின் பிறப்பு விழாவும், திருச்சிலுவை மாட்சி விழாவும் வெளி ஆடம்பரங்கள் தவிர்க்கப்பட்டு, உள்ளார்ந்த சிறப்புடன் கொண்டாடப்பட்டன. இறைவன் வாழ்த்தப் பெறுவாராக!

இம்மாத இறுதிவரையில் வார இறுதி நாள்களின்போது பொது வழிபாடுகள் நடைபெறாது எனத் தமிழக அரசு அறிவித்துள்ளது. நல்ல குடிமக்களுக்குரிய மனநிலையில் நாம் அரசின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவோம். இம்மாதம் இரண்டாம் சனியன்று பரிசுத்த அமலோற்பவ மாதா வாலிபர் சபையினர் வழக்கமாக நடத்தும் மாநகர அளவிலான மாபெரும் முழு இரவு தொடர் செபமாலை நடைபெறாது. கடவுளுக்குத் திருவுளமானால், டிசம்பர் மாதம் இரண்டாம் சனியன்று அது நடத்தப்படும். இருப்பினும், அக்டோபர் மாதம் செபமாலை மாதம் என்பதால், இப்போதைக்கு 19.09.2021 செவ்வாய் (மிலாடி நபி - அரசு விடுமுறை) அன்று காலை 07.05 முதல் மாலை 05.00 மணி வரையில் பகல் நேர தொடர் செபமாலை நமது பேராலயப் பங்கு அளவில் நடத்தப்படும். நம் இல்லங்களில் குடும்பமாக செபமாலை செபிப்போம், இறையருள் பெறுவோம்.

பனிமயத் தாயின் ஆசிகள் உங்களோடு இருப்பதாக!

என்றும் அன்புடன்,
**அருள்பணி. குமார்ராஜா**
பங்குத் தந்தை & திருத்தல அதிபர்



உதயம் 22 தாரகை 2

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
**அருட்பணி. குமார்ராஜா**
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருட்பணி. குமார்ராஜா

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
தூய பனிமய அன்னை பேராலயம்
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

### மிஷனரி சீடர்கள்

திருமுழுக்கு பெற்ற ஒவ்வொரு நபரும் நற்செய்தியின் சுவை கொண்ட வாழ்க்கையின் சாட்சிகளாக இருப்பதன் மூலம், பணிக்கு கிடைக்கும் நற்செய்தியில் ஈடுபட வேண்டும் என்று மன்றாடுவோம்.

# உள்ளே...

1. " வாழ்க அரசியே!" .................... 4
அருள் மரி வேந்தன்

2. மரியன்னை புனிதர்கள் :
புனித மரிய ரஃபயேல் அர்னேய்ஸ் .................... 6
அருள்பணி. குமார்ராஜா

3. பனிமய அன்னை .................... 8
தி. சொர்ணராஜன் விக்டோரியா

4. பனிமய அன்னை பேராலய மலரும் நினைவுகள்.......10
செல்வராஜ் மிராந்தா

5. பனிமயம் - மீள்பார்வை .................... 12
கலாபன் வாஸ்

6. நம் திருச்சபை, நமது பெருமை .................... 14
"மிலியன்"

7. விவிலியப் போட்டி .................... 16

8. மாதம் ஒரு மாதா படம் .................... 19

9. பனிமயப் பகிர்வு .................... 20

10. பனிமய சாட்சியம் .................... 25

மரியன்னையின் மேன்மைகள் : 20

மரியன்னை மன்றாட்டுகள் : 5

# "வாழ்க அரசியே!"

அன்னை மரியாவைக் கடவுள் விண்ணக மண்ணக அரசியாக உயர்த்தி முடிசூட்டினார் என்பதை நாம் நம்புகிறோம். செபமாலையின் போது மாட்சியின் மறையுண்மைகளுள் ஒன்றாக அதனை நாம் தியானித்து இறைவேண்டல் செய்கிறோம். அன்னையை "அரசியே" என்று வாழ்த்துவதற்கான விவிலிய முன்னோட்டங்களை நாம் ஆய்வு செய்வோம்.

மரியா நாசரேத்தில் பிறந்து வளர்ந்த ஓர் எளிய பெண். எனவே, அவரை ஏன் அரசி என்று அழைக்கவேண்டும் என்னும் கேள்வி எழுவது இயல்பே. இறைவனின் திருவுளம் என்னும் மறைபொருளையும், பழைய ஏற்பாட்டில் இறைவன் அருளிய இறைவாக்குகள் மற்றும் முன்னோடிகளையும் நாம் எண்ணிப் பார்க்கின்றபொழுதுதான் அவரை "அரசி" என்று அழைத்து வாழ்த்துவது எத்துணைப் பொருத்தமானது என்பதை உணரமுடியும்.

**பழைய ஏற்பாட்டின் முன்னோடிகள்.**

**1. பத்சேபா.** வியப்புக்குரிய விதத்தில் பழைய ஏற்பாட்டில் நாம் காணும் மரியாவின் ஒரு முன்னோடி தாவீதின் மனைவியான பத்சேபா. தாவீது எவ்வாறு உரியாவின் மனைவியான அவரைக் கவர்ந்து மணந்துகொண்டார் என்பது நாம் அறிந்ததே. இருப்பினும், கடவுளின் பார்வையில் பத்சேபா ஏற்புடையவராகவே இருந்தார். வரவிருக்கும் மீட்பரின் தாயான மரியாவுக்கு மூன்று வழிகளில் முன்னோடியாகத் திகழ்ந்தார்.



முதலில், அவர் தாவீதின் மகனான சாலமோனின் தாய். இயேசுவுக்குப் புதிய ஏற்பாடு தரும் பெயர்களுள் ஒன்று அவர் "தாவீதின் மகன்" என்பது. மேலும், இயேசுவே தாம் தாவீதின் மகனான "சாலமோனிலும் பெரியவர் அல்லவா" (லூக் 11:31) என்று சொல்லியிருந்தார். எனவே, சாலமோனின் தாயான பத்சேபா, புதிய சாலமோனான இயேசுவின் தாய் மரியாவுக்கு முன்னோடியாகிறார்.

இரண்டாவதாக, சாலமோன் அரசராகத் திருப்பொழிவு செய்யப்பட்டபின் நடைபெற்ற ஒரு நிகழ்வு நம் கவனத்தை ஈர்க்கிறது. "பத்சேபா அதோனியாவுக்காக அரசர் சாலமோனிடம் பரிந்து பேசும்படி போனார். அப்போது அரசர் எழுந்து அவரை எதிர்கொண்டு வந்து வணங்கியபின், தம் அரியணையில் அமர்ந்து கொண்டார். அரசரின் தாய்க்கு அவரது **வலப்புறத்தில் ஓர் இருக்கை போடப்பட்டது.** அவரும் அதில் அமர்ந்தார்" (1 அர 2:19). இவ்வாறு, அரசர் சாலமோனின் வலப்புற இருக்கையில் அரசரின் தாயாக, அரசியாக வீற்றிருந்து அரசியான மரியாவின் முன்னோடியாகத் திகழ்கிறார்.

மூன்றாவதாக, அன்னை மரியா போலவே, பத்சேபாவும் அரசன் சாலமோனிடம் அதோனியாவுக்காகப் பரிந்து பேசினார். பத்சேபாவின் "நல்லது; நான் உனக்காக அரசரிடம் **பரிந்து பேசுகிறேன்**" (1 அர 2:18) என்னும் சொற்களும் அவரை பரிந்துரையாளரான மரியாவின் முன்னோடியாகக் காட்டுகிறது.

**2. எஸ்தர்.** பழைய ஏற்பாட்டில் நாம் காணும் எஸ்தர் அரசியும் அன்னை மரியாவின் முன்னோடியாகப் பல வழிகளில் தோன்றுகிறார். அரசி வஸ்தி தம் கணவரான அரசருக்குக் கீழ்ப்படிய மறுத்து, அவரை இழிவுபடுத்தினார். வஸ்தி கீழ்ப்படிய மறுத்த

ஏவாளுக்கும், கீழ்ப்படிதலால் அரசரின் மனதை வென்ற புதிய அரசியான எஸ்தர் அன்னை மரியாவுக்கும் அடையாளங்கள் ஆகின்றனர். எஸ்தரின் வாழ்வில் நடைபெறும் பல நிகழ்வுகள் அன்னை மரியாவுக்கு முன்னோட்டமாக அமைவதை கூர்நோக்கின் வழி நாம் காண இயலும்.

பல பெண்களிலிருந்தும் எஸ்தர் அரசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிகழ்வே அன்னை மரியாவின் தேர்வுக்கு ஒரு முன்னோடியாக இருக்கிறது. "பெண்கள் அனைவரிலும் எஸ்தரையே மன்னர் மிகுதியாய் விரும்பினார். கன்னிப் பெண்கள் அனைவருள்ளும் அவரே மன்னரின் கண்களில் **மிகுதியான தயவு** பெற்றார். எனவே அவர் அவரது தலைமீது அரசியின் மகுடம் வைத்து, அவரை அரசி ஆக்கினார்" (எஸ் 2:17).

யூதப் பெண்ணான எஸ்தரை அரசியாக்கியது மட்டுமல்ல, அவருக்கு உரிமையும் அதிகாரமும் வழங்கினார் பாரசீக அரசரான அகஸ்வேர் (கிரேக்க பாடத்தில் அர்த்தக்சஸ்தா என்று அழைக்கப்படுகிறார்). "மன்னர் அவரை நோக்கி, 'எஸ்தர் அரசியே! உனக்கு என்ன வேண்டும்? உன் வேண்டுகோள் யாது? என் அரசின் பாதியேயாகிலும் அது உனக்களிக்கப்படும்'" (எஸ் 5:3) என்று கேட்பது இதற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது. அன்னை மரியா வானகத் தந்தையிடம் பரிந்துரைப்பவை அனைத்துக்கும் அவர் செவிசாய்ப்பார் என்பதற்கு எஸ்தர் அரசி முன்னோடியாக இருக்கிறார்.

யூதர்களுக்காகப் பரிந்துபேச எஸ்தர் அரசி முன் வந்ததும் இன்னொரு முன்னோட்டமாக இருக்கிறது. அவர்களுக்காகப் பரிந்து பேச "சட்டத்துக்கு எதிராக நான் மன்னரிடம் செல்வேன். இதனால் நான் இறக்க வேண்டியிருந்தாலும் சரியே" (எஸ் (கி) 4:16) என்னும் வரிகள் அன்னை மரியாவின் வாழ்வுக்கு முன்னோட்டம் சொல்கின்றன.

**3. சேபா நாட்டு அரசி.** சாலமோனின் ஞானத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு, அவரைப் பார்க்க வந்த சேபா நாட்டு அரசியும் (இவரது பெயர் குறிப்பிடப்படாதது ஒரு வியப்புதான்!) ஒருவகையில் அன்னை மரியாவின் முன்னோடியாகவே தெரிகிறார். இவர் சாலமோனின் ஞானத்தைக் கேள்விப்பட்டு அவரைச் சந்திக்க வந்தார். "சாலமோனைக் கண்டு, தம் மனத்திலிருந்த எல்லாவற்றையும் அவரிடம் கூறினார்" (2 குறி 9:1). "அரசர் சாலமோன் சேபாவின் அரசி விரும்பிக் கேட்டவை எல்லாவற்றையும் அவர் அரசருக்குக் கொண்டு வந்ததைவிட மிகுதியாகவே அளித்தார்" (2 குறி 9:12). தந்தையாம் இறைவன் மரியாவின் கீழ்ப்படிதலை ஏற்றுக்கொண்டு அவரை உயர்த்திப் பெருமைப்படுத்தியதை இது மறைமுகமாக எடுத்துச் சொல்கிறது. "அரசர் சாலமோன் சேபாவின் அரசிக்கு ஏராளமான பரிசுகள் கொடுத்ததுமன்றி, அவர் விரும்பிக் கேட்டவற்றையெல்லாம் கொடுத்தார்" (1 அர 10:13) என்பதுவும் அன்னை மரியா நமக்காகப் பரிந்துகேட்பவை அனைத்தையும் இறைவன் தருவார் என்னும் நம் நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறது.

**4. திருவெளிப்பாட்டு நூலின் அரசி.** "வானில் பெரியதோர் அடையாளம் தோன்றியது; பெண் ஒருவர் காணப்பட்டார்; அவர் கதிரவனை ஆடையாக அணிந்திருந்தார்; நிலா அவருடைய காலடியில் இருந்தது; அவர் பன்னிரு விண்மீன்களைத் தலைமீது சூடியிருந்தார்" (திவெ 12:1) என்னும் வரிகள் அன்னை மரியாவைச் சுட்டுவதாகவே காலங்காலமாகத் திருஅவை நம்புகிறது.



இந்த விவிலிய ஆதாரங்களின் அடிப்படையில் அன்னை மரியாவை நாமும் "அரசி" என்று வாழ்த்திப் போற்றுவோமாக!

**அருள் மரி வேந்தன்**

# புனித மரிய ரஃபயேல் அர்னேய்ஸ்

47 மரியன்னைப் புனிதர்கள்

(1911 - 1938)

## அன்னையைப் பற்றிக்கொண்ட ஓர் இளந்துறவி!



சவால்களைச் சந்திக்கும் இன்றைய இளைஞர்களுக்கு மாதிரியாக இன்றைய காலத்தைச் சேர்ந்த ஒரு புனிதர் தேவையல்லவா! அத்தேவையை நிறைவு செய்பவர்தான் 27 வயதே நிறைந்த புனித ரஃபயேல் அர்னேய்ஸ் (St. Rafael Arnáiz Barón). நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டு, நிரந்தர வாக்குறுதி வழங்காமலே இறந்துபோன ஸ்பெயின் நாட்டவரான ஓர் இளந்துறவிதான் ரஃபயேல் அர்னேய்ஸ்.

1989ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19 அன்று ஸ்பெயின் நாட்டின் சந்தியாகோ கம்போஸ்தெல்லா நகரில் நடைபெற்ற உலக இளையோர் விழாவில் திருத்தந்தை புனித இரண்டாம் ஜான் பவுல் ரஃபயேல் அர்னேய்சை இளையோரின் மாதிரியாக அறிவித்தார். மூன்று ஆண்டுகளுக்குப் பின் 1992ஆம் ஆண்டு அவரை அருளாளர் நிலைக்கு உயர்த்தினார். “கடவுளின் திருவுளத்திற்கு நிபந்தனையின்றிப் பணிந்து நடப்பதற்கு அர்னேய்ஸ் மிகச் சிறந்த மாதிரி” என்று பாராட்டினார். இளையோரின் பாதுகாவலராக மட்டுமல்ல, நீரிழிவு நோயால் அவதியுறுவோரின் நம்பிக்கையாகவும் இவர் பார்க்கப்படுகிறார். நம்பிக்கையற்ற சூழலிலும் நம்பிக்கையோடு வாழ்வதற்கும், இளைஞர்கள் இவ்வுலக இன்பங்களில் சிக்கிக்கொள்ளாமல், இறைவனைப் பற்றிக்கொண்டு வாழ்வதற்கும் ரஃபயேலின் வாழ்வு ஒரு விளக்காகத் திகழ்கிறது.

பொறியாளரான ரஃபயேல் அர்னேஸ், பத்திரிகையாளரான மெர்சடேஸ் பெயரன் என்னும் வசதியான தம்பதியரின் நான்கு மகன்களில் மூத்தவராக 1911 ஏப்ரல் 9 அன்று பிறந்தார். இளமையிலிருந்தே ஓவியம், கலை ஆகியவற்றில் பல்திறன் பெற்றிருந்தார். இவர் படிக்க விரும்பியது கட்டிடக் கலை. மாட்ரிட் நகரிலுள்ள பொறியியல் கல்லூரியில் கட்டிடக் கலைப்பிரிவில் சேர்ந்தார். ஆனால், நோயின் காரணமாகப் படிப்பை முடிக்கவில்லை. இறைவனின் அழைப்பை உணர்ந்த ரஃபயேல் அர்னேய்ஸ் தமது 23ஆவது வயதில் “ட்ராப்பிஸ்ட்” (Trappist) துறவற அவையில் இளந்துறவியாகச் சேர்ந்தார். தம் வாழ்வின் தோல்விகள் மற்றும் ஏமாற்றங்கள் காரணமாகத் துறவு வாழ்வைத் தேர்ந்துகொள்ளவில்லை, மாறாக கடவுளின் எல்லையில்லாப் பேரன்பே தன்னை ஆட்கொண்டதாக அறிவித்தார்.



இளவயதிலேயே தீவிர நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டிருந்த ரஃபயேலுக்கு துறவு மடம் ஒத்துவரவில்லை. மூன்று முறை மடத்தை விட்டு வீட்டுக்குத் திரும்பினார். ஓரளவு உடல் நலம்பெற்ற பின் மீண்டும் துறவுமடத்துக்குத் திரும்பினார். மொத்தமே 4 ஆண்டுகள் இளந்துறவியாக வாழ்ந்து, இறுதி அர்ப்பணம் வழங்காமலே 1938ஆம் ஆண்டு தமது 27ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

ரஃபயேல் இளவயதிலிருந்தே மரியன்னை பக்தியில் வளர்ந்தவர். இவரது 11ஆவது வயதிலேயே நோய்வாய்ப்பட்டார். மருத்துவர்கள் நலமாக்க முடியாததால், அன்னை மரியாவின் உதவியை நாடினார் இவரது தந்தை. வியத்தகு முறையில் நலம் பெற்றுப் பள்ளிக்குச் செல்லத் தொடங்கினார் ரஃபயேல். அன்னை மரியாவின் சிறப்பு உதவிக்காக ஸ்பெயின் நாட்டின் புகழ்பெற்ற சரகோசா தூண் மாதா திருத்தலத்துக்கு மகனை அழைத்துச் சென்று நன்றி கூறி மகனை தூண் மாதாவுக்கு அர்ப்பணித்தார் தந்தை.

அந்த ஊக்கத்திலேயே தம் துறவற வாழ்வைத் தொடர்ந்தார் ரஃபயேல். அவர் எழுதிய 33 கடிதங்களில் அன்னையிடமிருந்து தாம் பெற்ற ஆறுதலை, ஒளியை, உதவிகளை எழுதியுள்ளார் ரஃபயேல். துறவு இல்லத்தின் அமைதி, இறைவேண்டல்கள், “சால்வே ரெஜினா’ போன்ற மரியன்னைப் பாடல்கள் - இவை எல்லாமே ரஃபயேலை மிகவும் கவர்ந்தன.

துறவு வாழ்வுக்குத் தகுதியற்றவர் என்று பலரும் கருதினாலும், அவரது ஆழ்ந்த இறைப்பற்று, அர்ப்பணத்தைக் கண்ட சபைத் தலைவர்கள் அவரது இறப்புக்கு முன்னால் அவருக்குத் துறவற ஆடை அணிவித்தனர். துறவற சபையில் இறுதி வார்த்தைப்பாடுகூட கொடுக்க இயலாத தமது நோயையும், இயலாமையையும் பொறுமையுடன் ஏற்றுக் கொண்டார். அனைத்து அவமானங்களையும் தாங்கிக்கொண்டு அவரோடு இருந்த துறவிகளுக்கு சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்கினார். அவரது ஒரே விருப்பம் இயேசுவை, அன்னை மரியாவை, சிலுவையை, தமது துறவற சபையை அன்பு செய்யவேண்டுமென்பதே.

துயரம் நிறைந்த இவரது வாழ்வின் ஆறுதலாகவும், அன்பின் ஊற்றாகவும் இருந்தது அன்னை மரியாதான். அந்தத் தாயின் கைகளைப் பற்றிக்கொண்டே வாழ்வுப் பயணத்தில் நடந்தார் ரஃபயேல் அர்னேய்ஸ். அன்னையின்மீது கொண்ட பேரன்பைப் பலவிதங்களில் வெளிப்படுத்தினார். “திருப்பாடல்களின் இனிமைமிகு பாடகரான தாவீது அன்னை மரியாவை அறிந்திராதது எத்துணை இழப்பு! அறிந்திருந்தால் தமது திருப்பாடல்களில் மாமரியைப் பற்றி எத்துணை உயர்வாகப் பாடியிருப்பார். கடவுளுக்கு உகந்த அவரது பெரிய இதயம் முழுக்கவும் அன்னை மரியாதானே நிறைந்திருப்பார். எனக்கு மட்டும் தாவீதைப் போல எழுதும் ஆற்றல் இருந்தால்....” என்று எழுதினார் அர்னேய்ஸ். யாருக்கும் வராத புதிய சிந்தனையல்லவா!

நெடுநாள் வாழமாட்டோம் என்று உணர்ந்து கொண்டதால் இயேசுவையும், அன்னை மரியாவையும் அன்பு செய்வது மட்டுமே அவரது ஒரே விருப்பமாக இருந்தது. அவரது துறவற இல்லத்தில் மகிழ்வோடு வாழ்ந்த அவரது புனிதம் பற்றிய செய்திகள் வெளியே தெரிந்ததால், அவரது இறப்புக்குப் பின் மக்கள் சான் இசித்ரோவில் உள்ள அவரது கல்லறைக்கு திரளாக வரத் தொடங்கினர். அங்கே புதுமைகளும் நடந்தன. புனித இரண்டாம் ஜான் பவுல் 1992ஆம் ஆண்டு அருளாளராக உயர்த்தினார். திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் 2009ஆம் ஆண்டு இவரைப் புனிதர் என்று அறிவித்தார். ஏப்ரல் 26 அன்று இவரது திருவிழா கொண்டாடப்படுகிறது. நம்பிக்கையற்ற சூழலிலும் அன்னை மரியாவின் அன்புப் பிள்ளைகளாக நாமும் வாழ இவர் நம்மை அழைக்கிறார்.

அருள்பணி. குமார்ராஜா







# அன்னையின் திருவிழா

**மீண்டும் இயேசு சபையினர்**

முத்துக்குளித்துறையின் பாண்டியன் தீவில் நடந்த வேதனைக்குரிய நிகழ்ச்சிகளை எல்லாம் கேள்விப்பட்ட போர்த்துக்கீசிய மன்னர் **3ஆம் பிலிப்பு** (King Philip III) மிகவும் அதிர்ச்சி அடைந்தார். முத்துக்குளித்துறையின் ஆலயங்கள் அனைத்தையும் மீண்டும் இயேசு சபையினரிடமே ஒப்படைத்து விடும்படி, போர்த்துக்கீசிய மன்னர் கோவாவின் போர்த்துக்கீசிய ஆளுநருக்கும் கொச்சி ஆயர் அந்திரேயாஸ் அவர்கட்கும், 1614 ஆம் ஆண்டில் ஆணைப் பிறப்பித்தார்.

பல ஆண்டுகளாக மன்னரின் ஆணை செயல்படுத்தப்படவில்லை. அதனால் மன்னர் 3 ஆம் பிலிப்பு மீண்டும் கோவா ஆளுநருக்கு கண்டிப்பான உத்தரவை முடங்கல் மூலம் அனுப்பினார்.

போர்த்துக்கீசிய மன்னரின் ஆணையை அறிந்து அதிர்ச்சியுற்ற கொச்சி ஆயர் அந்திரேயாஸ், தனது ஆயர் பதவியை ராஜினாமா செய்தார். அவரைத் தொடர்ந்து **செபாஸ்தியானாஸ் சந்த பேதுரு** (Dom Sabastianos Santa Pedro, 1615-1624) ஆயராகப் பொறுப்பேற்றார்.

1621 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இயேசு சபைக் குருக்கள் முத்துக்குளித்துறைக்கு திரும்பி வந்தனர். ஏறக்குறைய பதினோர் ஆண்டுகளுக்குப் பின் திரும்பி வந்த இயேசு சபையினரை மக்கள் கோலாகலச் சிறப்புடனும் ஆரவாரத்துடனும், உள்ளம் நிறை மகிழ்ச்சியுடனும் வரவேற்றனர்.

முத்துக்குளித்துறைக்கு திரும்பி வந்த இயேசு சபையினர், தூத்துக்குடியில் இடித்துத் தகர்த்தப்பட்ட தலைமை இல்லத்தை கட்டியெழுப்பினர். இந்த தலைமை இல்லத்தின் நிர்வாகத்தின் கீழ் 15 இயேசு சபைக்குருக்கள் முத்துக்குளித்துறையில் பணியாற்றினர்.

தூத்துக்குடியின் இந்த தலைமை இல்லத்தோடு மதுரை மிஷனும் மன்னார் தீவும் இணைந்திருந்தன.

**இயேசு சபை ஆண்டறிக்கை**

1609 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் 1621 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையுள்ள 12 ஆண்டுகளில், இயேசு சபையினர் முத்துக்குளித்துறையில் பணியாற்றாத காரணத்தால், முத்துக்குளித்துறையின் பங்குகள் நிலவரம் பற்றி இயேசு சபை ஆண்டறிக்கைகள் ஏதும் எழுதப்படவில்லை.

பாண்டியன் தீவில் உள்ள தேவமாதா ஆலயத்தில் பரத மக்கள் வழிபட்டு வந்த பனிமய அன்னையின் திருச்சுரூபம் பற்றி பாண்டியன் தீவில் நடந்த போருக்குப்பின் வரலாற்றுக் குறிப்புகள் ஏதுமில்லை.

**இடம் மாறிய அன்னை**

1614 ஆம் ஆண்டில் கொச்சி இயேசு சபை மாநிலத் தலைவர் **நிக்கோலாஸ் பிமெந்தா** (Nicholas Pimenta) முத்துக்குளித்துறையில் உள்ள இயேசு சபை நிறுவனங்கள் பற்றி கோவா ஆளுநருக்கு அறிக்கையொன்று சமர்ப்பித்துள்ளார். அந்த அறிக்கையில், பாண்டியன் தீவில் உள்ள இயேசு சபையின் தலைமை இல்லம் பரவ மக்களின் நன்கொடையால் நடத்தப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்படியென்றால், போரின்போது இடிக்கப்பட்ட தலைமை இல்லம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு இருக்கலாம் என்பதே திண்ணம். 1600 ஆம் ஆண்டு முதல் 1617 ஆம் ஆண்டு வரை தூத்துக்குடி தலைமை இல்லத்தில் வணக்கத்திற்குரிய **சகோதரர் பேதுரு தி பாஸ்து** பணிபுரிந்ததாக இயேசு சபை அறிஞர் **குய்ரோஸ்** குறிப்பிடுவதை கண்ணுறும்போது, தீவில் புதுப்பிக்கப்பட்ட



தலைமை இல்லத்தில் அவருடன் சேர்ந்து இன்னும் சிலர் குடியிருந்திருக்கலாம் என்பதே உண்மையாகும். ஆக, இந்த இல்லத்தில் தான் பனிமய அன்னையின் சுரூபம், பேதுரு தி பாஸ்து அவர்களால் வணங்கப் பட்டு வந்திருக்க வேண்டும்.

தூத்துக்குடி மக்களிடையே பரவலாக நிலவி வரும் பாரம்பரியச் செய்தி ஒன்றுண்டு. அதன்படி, பாண்டியன் தீவில் நடந்த போருக்குப் பின் பரவ மக்கள் பனிமய அன்னையின் திருச்சுரூபத்தை தூத்துக்குடிக்கு அருகேயுள்ள **சிவந்தாகுளம்** அல்லது **சேர்ந்தான்குளம்** என்ற பரவர் குடியேற்றத்திற்கு கொண்டு சென்றனர்.

அன்றைய பரவ சாதித் தலைவன் **தொன் எரோணிமுஸ் தெக்குரூஸ் பீரிஸ்** (1590-1615) என்பவர், சிவந்தாகுளத்தில் **புனித ஸ்நாபக அருளப்பரின்** பெயரால் ஒரு சிற்றாலயம் கட்டியிருந்தார். மன்னாரில் உள்ள **பட்டி** (Pati in Mannar) என்னும் இடத்தில் சங்கிலி என்ற கொடிய மன்னனால் 1544 ஆம் ஆண்டில் கொலை செய்யப்பட்டு வேதசாட்சிகளாக மரித்த 600 பரவர்களின் நினைவாக இந்த ஆலயம் கட்டப்பட்டது. இந்தச் சிற்றாலயத்தில் தான் பனிமய அன்னையின் திருச்சுரூபம் வைக்கப்பட்டது என்பதே மக்களின் பொதுக் கருத்து.

சிவந்தாகுளம் என்ற ஊரானது, பனிமய அன்னையின் திருச்சுரூபம் அங்கு வந்ததும், ஸ்ரீவந்தாள்குளம் என்று அழைக்கப்பட்டு, காலப்போக்கில் சேர்ந்தாள்குளம் என மருவி, தற்போது சிவந்தாகுளம் என்றே அழைக்கப்படுகிறது.

### அன்னையின் திருவிழா

1648 ஆம் ஆண்டின் இயேசு சபை அறிக்கையில் சுவாமி **பல்தசார் டி கோஸ்தா** (Balthasaar Da Costa) அவ்வாண்டில் கொண்டாடப்பட்ட பனிமய அன்னையின் திருநாளைப் பற்றி கீழ்வருமாறு விவரித்து எழுதியுள்ளார்:

“பனிமய அன்னை ஆலயத் திருநாளை முத்துக்குளித்துறை மக்கள் அனைவருமே பக்தி விமரிசையோடு கொண்டாடுகின்றனர். நவநாள் காலங்களில் மாலை ஆராதனை நடைபெற்றபின், பரவ மக்கள் தேவ அன்னையைப் பற்றி நாடகங்களை மிக அருமையாக நடித்துக் காண்பித்தனர். பட்டங்கட்டி ஒருவர் 100 குருசதோ மதிப்புள்ள ஒரு வெள்ளி சிலுவையை ஆலயத்திற்கு காணிக்கையாக கொடுத்தார். மக்கள் மனமுவந்து வழங்கியுள்ள காணிக்கைகளால், அன்னையின் ஆலயம் பொன், வெள்ளி ஆபரணங்களால் நிறைந்து காண்கிறது. முத்துக்குளித்துறையின் மற்ற ஆலயங்களும் மக்கள் அளித்த நன்கொடைகளால் ஆபரணங்கள் நிறைந்து துலங்குகின்றன. கீழ்த்திசை நாடுகளிலுள்ள கிறிஸ்தவர்களிலே, முத்துக்குளித்துறை பரவ மக்கள் மிகவும் சிறந்தவர்கள் ஆவர்”.

### புதுப் பொலிவு கண்ட ஆலயம்

1621 ஆம் ஆண்டில் முத்துக் குளித்துறைக்கு திரும்பி வந்த இயேசு சபையினர் தங்களது தலைமை இல்லத்தை மீண்டும் கட்டியெழுப்பியதோடு, பனிமய அன்னையின் ஆலயத்தையும் புதுப்பித்தனர்.

புதுப்பிக்கப்பட்ட பனிமய அன்னையின் ஆலயத்தில் மீண்டும் பனிமய அன்னையின் திருச்சுரூபம் நிறுவப்பட்டு வழிபட்டு வரப்பட்டது. அன்னையின் திருநாளை ஆண்டுதோறும் ஆகஸ்ட் 5 ஆம் நாளன்று முத்துக்குளித்துறை பரவ மக்கள் சிறப்பாக கொண்டாடி வந்தனர்.

- (தொடரும்)



**தி. சொர்ணராஜன் விக்டோரியா**



# 5 பனிமய அன்னை பேராலய மலரும் நினைவுகள்...

## (1930 - 1954)

அன்றைய ஆலயத்தின் நிலையைக் கண்ட அருள்தந்தை பவுல் அலங்காரம் அடிகளாரின் மனதில் ஆலயத்தைப் பராமரிக்க சில மாற்றங்களையும் மராமத்துப் பணிகளையும் செய்ய வேண்டுமென்ற எண்ணம் தோன்றியிருக்க வேண்டும். ஏறத்தாழ இரண்டு ஆண்டுகால களப்பணிக்குப் பிறகு சில உபகாரிகளின் பொருளுதவியோடு கீழ்க்கண்ட திருப்பணிகளைத் தொடங்கினார் :

பொம்பே மாதா பீடத்துக்கும் திருச்சிலுவை பீடத்திற்கும் (இப்போதைய சகாய மாதா பீடம்) இடையிலிருக்கும் பிரதான வளைவு (Arch) உயரத்திலும் அகலத்திலும் குருசு பத்தியில் இருக்கும் வளைவுகளின் அளவே இருந்ததால் தலைவாசல் பக்கம் அல்லது மண்டபத்தில் இருந்து பார்த்தால் மாதாவின் சுரூபம் முழுவதும் (மேல்பாகம்) தெரியாது. எனவே அந்த (Arch) ஆர்ச்சின் உயரத்தைக் கூட்ட வேண்டும்.

சுவர் கனமோ 3 க்யூபிட் அதாவது நான்கரை அடி! சுண்ணாம்பு மணல் இவற்றை பதனீர் விட்டு அரைத்து கடுக்கா நீர் சேர்த்துக் கட்டியிருந்ததால் இடித்து அகலப் படுத்துவது எளிதல்ல. இன்றுபோல் நவீன உபகரணங்கள் இல்லாத காலம்! பல பொறியாளர்களின் ஆலோசனைப்படி பணியைத் தொடங்கினார்கள்.

அந்த வளைவைப் பெரிதாக்க கட்டுமான பணியாளர்களும் பொறியாளர்களும் அனுபவித்த சிரமத்தையும் கையாண்ட நுணுக்கங்களையும் பதிவு செய்வது தேவையற்றது என்பதால் தவிர்க்கப்படுகிறது. பெரிதாக்கப்பட்ட வளைவின் மேல் இலத்தீன் மொழியில் Sancta Maria Ora Pro Nobis என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்டன. அதோடு பக்கவாட்டு சுவர்களில் இருந்த ஆறு வாசல்களுக்கு மேல் வர்ணக் கண்ணாடிகள் பதிக்கப்பட்ட வட்ட வடிவான துறப்பான்கள் பொருத்தப்பட்டன. பக்கவாட்டு சுவர்கள் சிமன்டினால் மேல்பூச்சு பூசப்பட்டன. அப்பணி நடக்கும்போது ஒரு சுவரில் பதிக்கப் பட்டு ஒரு கண்ணாடி பேழையில் பத்திரப் படுத்தப்பட்டிருந்த அருட்திரு என்றி என்றிக்கஸ் அடிகளாரின் எலும்புகள் கண்டெடுக்கப்பட்டன.



கேரளத்திலிருந்து கொண்டுவரப்பட்ட தொழிலாளர்களால் ஆலயத்தின் தரை முழுவதும் மொசயிக் தளமாக மாற்றப்பட்டது. தூயகம் சிறிது விரிவுபடுத்தப்பட்டு இரண்டு பக்கப் பத்திகளிலுமிருந்து (குருசு பத்தி) நடுப்பத்திக்கு வர 41/2 சுவர்களைக் குடைந்து சிறு குகை போன்ற பாதைகள் அமைக்கப்பட்டன. அதன்பின் ஆலயத்தின் சிமின்டு பூசப்பட்ட சுவர்களுக்கும் பலகையாலான மேற்கூரை விதானத்திற்கும் ஸ்ப்ரே மெஷன் (Spray Gun) மூலம் வர்ணம் பூசப்பட்டது. அத்தனை பணிகளும் 1945/1946களில் நடந்து முடிந்தன. ஆலயம் ஒரு புதுப் பொலிவுடன் காட்சி தந்தது.

காந்தியவாதியான அருள்தந்தை பங்குப் பணித்தளத்தில் ஏழ்மையில் வாடும் குடும்பங்களைக் கைதூக்கிவிட சில முயற்சிகளை மேற்கொண்டார். ஆதரவற்ற விதவைகள் சிலருக்கு பலகாரம் செய்து விற்று வாழ்க்கை நடத்த பொருளுதவிகள் செய்தார். அதுபோல் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த இளம்பெண்களுக்கு என சிலுவைக் கோவிலை அடுத்திருந்த காலி நிலத்தில் ஓடுகள் வேய்ந்த ஒரு மண்டபத்தைக் கட்டி அதில் இராட்டை கழகம் ஒன்றை ஆரம்பித்தார். பல பெண்கள் பலனடைந்தார்கள்.

அம்பர்சக்ரா என்ற கருவி கதர் நூல் பயன்பாட்டுக்கு வந்ததைத் தொடர்ந்து பழைய மையவாடிக் கோவிலாக இருந்த சன் பவுல் ஆலயத்தில் வடக்குப் பகுதியில் Hall Sixty என்ற ஒரு மண்டபத்தைக் கட்டி அதில் நூற்புக் கழகத்தை நடத்தினார்.

மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த மக்களில் பலர் ஏழ்மையின் கோரப் பிடியில் இருப்பதை கவனித்த அருள்தந்தை அவர்கள் 1949/1950களில் மீனவருக்கென ஒரு கூட்டுறவு சங்கத்தை ஆரம்பிக்க முயற்சிகள் எடுத்தார்கள். மீனவர்களின் பிரச்சனைகளில் அதிக கவனம் செலுத்தி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த பெரும் முயற்சிகள் எடுத்தார்.

ஏழைகளின் இதயத்தில் இறைவனைக் கண்ட தந்தை அவர்கள் ஆற்றிய மனித நேயப் பணிகள் ஏராளம். எழுத ஏடு அடங்காது.

வளரிளம் பருவத்திலிருந்த எங்களைப் போன்றவர்கள் தங்கள் இசைத் திறமையை வளர்த்துக் கொள்ள பிரிவினை சபையைச் சேர்ந்த Sam என்ற Music Master ஒருவரை அமர்த்தி மேற்கத்திய இசைப் பயிற்சி அளித்தார்கள். முன்பு திருவழிபாடுகள் குறிப்பாக திருப்பலி முழுவதும் இலத்தீன் மொழியிலிருந்ததால் மக்கள் நேரடி பங்குபெற பல பாடல்களை கர்னாடக மெல்லிசை முறையில் இயற்றி பயிற்றுவித்தார்கள்.

திருப்பலியின்போது வார்த்தை வழிபாடு, நற்கருணை வழிபாடு போன்ற பகுதிகளுக்கேற்றாற்போல் பாடல்களை இயற்றி மக்களைப் பாட வைத்தார். குறிப்பாக ஒரு பாடலின் சில வரிகள் நினைவுக்கு வருகின்றன. திருமணத் திருப்பலியின்போது மணமக்கள் திருமண வார்த்தைப்பாடு கொடுத்து ஆசீர்வதிக்கப் பட்டவுடன் "தே தேயும்" பாடுமுன்பு தமிழில் "சங்கரா பரண" ஜன்ய ராகமாகிய மோகன ராகத்தில் கீழ்க்கண்ட பல்லவி கொண்ட பாடல் பாடப்பட்டது.

"ஆசிய நீ அருள்வாய் - எம்தேவா
ஆசிய நீ அருள் வாய்.
திருச்சபை தாய்முன் திருமணம் செய்த
புதிய இத் தம்பதி யோர்களை - (ஆசிய நீ)"

இதுபோன்ற பல பாடல்கள் அவரால் எழுதப்பட்டு அவராலேயே இசையமைக்கப் பட்டு திருப்பலியின்போது பாடப்பட்டன. 1942 முதல் 1952 வரை அவர் பங்குத்தந்தையாக பணியாற்றிய பத்தாண்டு காலத்தைப் பொற்காலம் என்றால் மிகையாகாது.

- தொடரும்.



**செல்வராஜ் மிராந்தா**

# 'பனிமயம்' - மீள் பார்வை 25

**2005**

### இதயங்கள் திறக்கப்படும்!

எல்லா மக்கள் மத்தியிலும் (மதப் பாகுபாடின்றி) இறைப்பற்று, தெய்வ நம்பிக்கை, தெய்வ பயம் போன்ற எண்ணங்களை வளரச் செய்துள்ளது **சுனாமி** பேரலை நிகழ்ச்சி. ஊரோ, உறவோ, சேர்த்து வைத்த பொருளோ நிலைக்காது - இறை உறவு ஒன்றே நிலைத்திருக்கும் என்ற எண்ணம், பலரின் உள்ளத்தில் ஓங்கி ஒலிக்கின்றது..

இந்நிலையில், இறை பராமரிப்பில் நம்மை முற்றிலும் கையளிப்போம். வாழ்வை நிறைவாகத் தரும் அவரது திட்டத்தில், நம்மை முற்றிலுமாக இணைத்துக் கொள்வோம். - **பணி. ஜெரோசின் அ.கற்றார்.** (**கொரோனா** பெருந்தொற்றுக் காலத்திற்கு ஏற்ற தகவல்).

### மனந்திரும்புங்கள்!

ஆண்டுக்கு ஐம்பது லட்சம் திருப் பயணிகள் வந்துபோகும் திருத்தலம் எது? எந்தத் திருத்தலத்தின் மாதிரிக் குகை, உலகில் ஏராளமான இடங்களில் நிறுவப் பட்டுள்ளது? மிக அதிகமான அற்புதங்களும் புதுமைகளும் நடைபெறும் திருத்தலம் எது?..... இந்த மூன்று கேள்விகளுக்குமான ஒரே விடை, பிரான்ஸ் நாட்டிலுள்ள **லூர்து** நகருக்குத்தான் இத்தனை பெருமைகளும்!

ஆயிரக்கணக்கானோர் தங்களுக்கு அற்புதம் நிகழ்ந்திருப்பதாக அறிக்கை யிடுகின்றனர். உடல், உள்ள நலம் பெற்றுத் திரும்புகின்றனர்.

உடல், உள்ள குணம் பெறுதலைவிட மேலானது, அங்கே செல்லும் திருப்பயணிகள் அனைவரும் பெறுகின்ற அமைதி, சமாதானம், ஆன்மீக நிறைவு. உலகம் தர முடியாத மகிழ்வை, அன்னையின் வழியாக இறைவன் தருகின்றார்.

எல்லாருக்கும் லூர்து நகரம் செல்லும் வாய்ப்பு கிட்டாமற் போகலாம். ஆனால், லூர்து மாதா கெபியைக் காணும் போதெல்லாம் அன்னையை நம் இதயம் வணங்கட்டும். **'மனந்திரும்புங்கள்'** என்ற செய்தி, நம் வாழ்வில், நிஜமாகட்டும். - **அருட்தந்தை முனைவர் குமார் ராஜா.**

அவர் : கல்யாணப் பேச்சை எடுத்தாலே எரிஞ்சு விழறான் என் மகன்.


இவர் : கல்யாணத்திலே அவனுக்கு விருப்பமில்லையோ?

அவர் : ஆமா! ....."இத்தனை வயசுக்குப் பிறகும்கூட உங்களுக்கு ஒரு கல்யாணம் ரொம்பத் தேவைதானா" - ன்னு என்னைக் கேட்கிறான்.

**- D. மரிய தஸ்நேவிஸ் சிந்துஜா**

### 'பனிமயம்' அட்டைப்படம்

'பனிமயம்' இதழ்களின் அட்டைப் படங்கள் எல்லாமே மாதாவின் பல்வேறு தோற்றங்களை வெளிக்கொணரும் வகையில் அமைந்துள்ளன. ஒரு சில படங்களைப் பார்த்து "இது மாதாதானா?" என்று கேட்பவர்களும் உண்டு.



2005 பெப்ரவரி 'பனிமயம்' அட்டைப் படத்தைப் பார்த்து ஒரு பெரியவர் "இது யாரோ ஒரு நோனா மாதிரியில இருக்கு" என்றார். வேறு சிலர் தொலைபேசியிலும், அஞ்சல் வழியிலும் தொடர்பு கொண்டு, ஏற்றுக் கொள்ள இயலாததைத் தெரிவித்தனர்.

BASILICA OF THE NATIONAL SHRINE OF THE IMMACULATE CONCEPTION - WASHINGTON D.C. வெளியிட்ட 'OUR LADY IN ART - 2004'-ல் கொடுத்துள்ள மாதாவின் படங்களில் ஒன்றுதான் MADONNA AND CHILD, JOURDAN, ADOLPHE - பெப்ரவரியில் அட்டைப் படமாக வெளியிடப்பட்டது.



**புதியவர்கள் வருகை**



திருத்தந்தை இரண்டாம் ஜான்பால், ஏப்ரல் இரண்டாம் நாள், 2005-ல் இறைபதம் சேர்ந்தார்கள்.



திருஅவையின் 265-வது பாப்புவாக, ஜெர்மனியின் **கர்தினால் ஜோசப் ராட்சிங்கர், பதினாறாம் பெனடிக்ட்** என்ற பெயரில் பொறுப்பேற்கிறார்.



நமது அன்னையாம் முத்துக் குளித்துறை மறைமாவட்டத்தின் ஆறாவது ஆயராக, புதுவை மறைமாநிலத்தின் அருந்தவப் புதல்வர் **பேரருட்திரு. இவோன் அம்புரோஸ்** அவர்கள் பொறுப்பேற்கிறார். இரு ஆண்டுகளின், செப, தவப் பலனாக நம் புதிய ஆயர் நமக்குக் கிடைத்துள்ளார்கள்.

புதிய திருத்தந்தையையும், புதிய ஆயரையும் எமக்குத் தந்த இறைவா, உமக்கு நன்றி. - **பணி. ஜெரோஸின் அ. கற்றார்.**

**தனிநாயகம் அடிகளார்**

பல்வேறு நாடுகளிலும் உலகத் தமிழ் மாநாடுகள் நடைபெற ஆர்வமுடன் செயலாற்றியவர் தனிநாயகம் அடிகளார். தூத்துக்குடி மறைமாவட்டத்தில் பணியாற்றியபோது, TLS என்ற தமிழ் இலக்கியக் கழகத்தைப் புதுக் கிராமத்தில் நிறுவினார். தூத்துக்குடியில் 1949 முதல் 1951 வரை சமயப் பணியில் தீவிரமாக ஈடுபட்டார். புனித சார்லஸ் ஆலயத்தில் ஞாயிறுதோறும் மறையுரையாற்றினார்.

பனிமய மாதா ஆலயத்தில் திருவிழாவின் போது பத்து நாளும் மறையுரையாற்றினார். ஒரு பெரிய வெள்ளிக் கிழமை ஆற்றிய மறையுரை இன்றும் போற்றப்படுகிறது. - "ஆண்டவர் வெள்ளியில் இறந்தபோது, ஞாயிறும் திங்களும் வெள்ளியும் மறைந்தன" - என்றார் (ஞாயிறு = சூரியன், திங்கள் = நிலா, வெள்ளி = விண்மீன்கள்) - Fr. Dr. வே. அந்தனி ஜான் அழகரசன் - இலங்கை.

**ஞானசூனியத்தின் ஞானோதயம்**

சாமியாரு, வெறுமனே தன் பதவிக் காலத்துல எப்படியாவது கோயிலத் திருத்தணும், பீடத்தை மாத்தணும், பங்களாவைக் கெட்டணும் அப்படிங்கிற மன நிலையை மாத்தி, மக்களைத் திருத்தணும். இந்த ஊருல என் காலத்தில யாருமே இனி குடிக்க மாட்டாங்கன்னு நான் மாத்துவேன். இந்த ஊரு மக்களுக்கு தெனமும் நூறு ரூபா ஒழுங்கா வருமானம் கெடைக்கிற மாதிரி வகை செய்வேன். பொருளாதாரத்திலயும், கல்வித் தரத்திலயும், சமூக நிலையிலயும், என் பங்கை நான் மேம்படுத்துவேன்னு எல்லாச் சாமியாரும் பிரதிக்கினையோடு பணியாற்றினாப் போதும். - திருச்சபை சொல்ற இறையாட்சி மலரும். - **ஞானியார் ஆலிவர்.**



**கலாபன் வாஸ்**
94863 90793

**வாழ்த்துகள்!**

**கடந்த 09.09.2021 வியாழன் அன்று**
**அந்தோனியார் அரங்கத்தில்**
**நடைபெற்ற விழாவில்**
**90 அகவை நிறைவு செய்த**
**திரு. கலாபன் வாஸ்**
**அவர்களுக்குக்**
**கடந்த 21 ஆண்டுகளாகப்**
**'பனிமயம்' இதழில் எழுத்துப்**
**பணியாற்றி வருவதற்காக**
**பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது.**
**அன்னாரின் புதிய நூலும்**
**வெளியிடப்பட்டது.**
**நூறாண்டு வாழ்க நீ எம்மான்!**

நம் திருச்சபை, நமது பெருமை - 5

# ஒரு தலைமை, ஒரு வழிபாடு, ஒரே சட்டம்!

**ஒரு தலைமை.** கத்தோலிக்கத் திருஅவையின் பெருமைகளுள் ஒன்று அதன் தலைமை. கடந்த 21 நூற்றாண்டுகளாக திருத்தந்தையின் தலைமையில் இயங்கி வரும் கட்டுக்கோப்பான அமைப்பாக நம் திருஅவை விளங்குகிறது. புனித பேதுருவில் தொடங்கி இன்றைய திருத்தந்தை பிரான்சிஸ் வரையில் 266 **திருத்தந்தையர்** திருஅவையை வழிநடத்தியுள்ளனர். இத்தனை ஆண்டுகளாக ஒரே தலைமையின்கீழ் இயங்கிவரும் பெருமை வேறு எந்த அமைப்புக்கும், சமயத்துக்கும் கிடையாது.

உலகில் வாழும் 130 மில்லியன் கத்தோலிக்கர்களும் திருத்தந்தையைத் தமது ஆன்மீகத் தலைவராக ஏற்றுக்கொள்கின்றனர் என்பதே ஒரு வியப்பூட்டும் செய்திதான். திரு அவையின் நீண்ட வரலாற்றில் திருஅவையின் மேய்ப்புப் பணிகள் தவிர்த்து, நம் திருத்தந்தையர் பல்வேறு விதமான இதர பணிகளையும் ஆற்றியிருக்கிறார்கள். அரசியல் சிக்கல்களைத் தீர்த்தல், உலகின் அறநெறிகளை உருவாக்குதல், மானிட விழுமியங்களைக் கூர்மைப்படுத்துல் எனத் திருத்தந்தையர் இந்த உலகின்மீது மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றனர்.

